


பிரசாத் மூவீஸ்
அளிக்கும்

# தாயில்லாப் பிள்ளை

டைரக்ஷன்
**பிரசாத்**

பிரசாத் மூவிஸ்

அளிக்கும்

# "தாயில்லாப்பிள்ளை"

நடிகர்கள் :

| | | |
|---|---|---|
| டி. எஸ். பாலையா | — | பதஞ்சலி சாஸ்திரி |
| ஜி. முத்துக்கிருஷ்ணன் | — | சங்கர் |
| கல்யாண்குமார் | — | சோமு |
| எஸ். ராமாராவ் | — | ரங்கு |
| மனோகர் | — | டாக்டர் பாரதி |

நடிகைகள் :

| | | |
|---|---|---|
| எம். வி. ராஜம்மா | — | பார்வதி |
| எல். விஜயலட்சுமி | — | சுகுணா |
| மாதுரிராய் | — | சந்திரா |
| சந்தியா | — | சுசிலா |
| டி. பி முத்துலட்சுமி | — | கங்கம்மா |

நாகேஷ் - தக்ஷணாமூர்த்தி, ராஜமோகன்,

சி. வி. வி பந்துலு

செந்தாமரை, சீதாலட்சுமி, சந்திரிகா, பேபிமங்களா

மற்றும் பலர்

இசை அமைப்பு :

கே. வி. மகாதேவன்

திரைக்கதை - வசனம் :

கலைஞர் மு. கருணாநிதி M L.A.

தயாரிப்பு :

ஏ. ஆனந்த்

டைரக்ஷன் :

பிரசாத்

A.R. KALIAPERUMAL

# தாயில்லாப் பிள்ளை

## (கதைச் சுருக்கம்)

"பெற்றால்தானா தாய்? பெற்றவளைவிடப் பன்மடங்கு பேணி வளர்ப்பவளும் தாய்தான்!"

என்று, தாய்மை இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக நின்ற பார்வதிக்கு,

பழமை உணர்வும், புதுமையை கண்டாலே புலியெனச் சீறும் குணமுங்கொண்ட பதஞ்சலி சாஸ்திரியார் கணவனாக அமைந்தார்.

அவர் கட்டிக் காக்கும் சாஸ்திர, சம்பிரதாய, ஆச்சார ஐதீகங்களுக்கு அணுவளவும் களங்கம் ஏற்படுவதையும் அவரால் தாங்கிக் கொள்ள முடியாது.

அதனால்தான் பார்வதியின் அண்ணன் டாக்டர் பாரதி, அவருக்குப் பெரும் பகைவனாகத் தோன்றினான்.

நோயாளிகளுக்கு மட்டுமன்றி, சமுதாயத்தைப் பிடித்தாட்டும் பிணிகளுக்கும் மருந்தளித்து வந்த பாரதி—பதஞ்சலியின் கொள்கைக்கு விரோதமாகக் கலப்புத் திருமணம் செய்து கொண்டவன்.

அதனால் இரு குடும்பங்களின் தொடர்பும் அறுந்து போய்க் கிடந்தது.

இருமுறை கருவுற்று—கருச்சிதைந்த காரணத்தால் கலங்கி நின்ற பார்வதி, மூன்றாவது முறை கருவுற்ற போது குறைவின்றிக் குழந்தை பெற—அண்ணனின் மருந்து முறையை வேண்டினாள்.

அதில் ஏற்பட்ட ஆத்திரத்தில், பார்வதியை வீட்டை விட்டு, அவள் அண்ணன் வீட்டுக்கே துரத்தி விட்டார் பதஞ்சலி!

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான், பதஞ்சலி சாஸ்திரியாரின் குடும்பத்தில் கப்பியிருந்த காரிருள் விலகுவதற்கான முதல் ஒளிக்கதிர் தோன்றிற்று.

அந்த ஒளிச்சிதறல் குடியானவ குலத்துப் பொன்னன் வீட்டில் பிறந்து கிடந்தது.

ஆம்; பொன்னனின் மனைவி, குழந்தைக்குத் தாயாகி உடனே சவமாகி விட்டாள். சுகப் பிரசவத்தில் குழந்தையைக் கண்டு களிப்புற்ற பார்வதி, தன் குழந்தையோடு பொன்னனின் குழந்தைக்கும் பாலூட்டி வளர்க்க வேண்டிய நெருக்கடிக்கு ஆளாகிறாள்.

கூடுவிட்டுப் போன பிள்ளை
குடியிருக்கும் இடம் தேடி
ஓடிவந்த தாய்ப் பறவை
ஊமையாகி நின்றதையா

தன்பிள்ளை என்று சொல்ல
தாயாலும் முடிய வில்லை
தாயென்று அறிந்து கொள்ள
சேயாலும் கூட வில்லை

உள்ளத்தில் இருக்குதையா
உண்மை சொல்ல மயங்குதையா
பொல்லாத தடையை எண்ணி
புலம்புதையா கலங்குதையா

(சின்ன...)

3

இயற்றியவர் :
**கவிஞர் கண்ணதாசன்**

பாடியவர்கள் :
**சீர்காழி கோவிந்தராஜன்**
**பி. சுசிலா**

**ஆண் :** வாம்மா வாம்மா சின்னம்மா
வயசு வந்த பொண்ணம்மா
இந்த நேரம் காட்டுக்குள்ளே
எங்கே வந்தே சொல்லம்மா

**பெண்:** வாய்யா வாய்யா சின்னையா
வயசு வந்தா என்னையா
உன்னைத் தேடி காட்டுக்குள்ளே
ஓடி வந்தா பொண்ணையா

**ஆண் :** கடகட மேளம் கொட்டட்டா
கழுத்தில் தாலி கட்டட்டா
ஜாம் ஜாம் விருந்து பாட்டுக்கச்சேரி
நாட்டிய மெல்லாம் வைக்கட்டா (வாம்மா...)

**பெண்:** அத்தை என்பது கருமந்தி
அவதான் உனக்கும் சம்பந்தி
சத்தம் கேட்டா இங்கே வருவா
தாலியைக் கட்டு நீ முந்தி (வாய்யா...)

**ஆண் :** பாறைக்குள்ளே வேரிருக்கு
பழத்துக்குள்ளே வண்டிருக்கு

**பெண்:** மனசுக்குள்ளே ஆசையிருக்கு
மயக்கம் கொண்டு நானிருக்கேன் (வாய்யா...)

**ஆண் :** காத்திலே பறக்கும் ஆடையிலே
கட்டிகிட்டு பறக்குது எம்மனசு

**பெண்:** கட்டி இருக்கும் மனசிலே நல்லா
ஒட்டிகிட்டு இருக்குது எம்மனசு (வாம்மா...)

இயற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன்



பாடியவர்கள் :
ஏ. எல். ராகவன்
எல். ஆர். ஈஸ்வரி & கோரஸ்

(தொகையறு)

ஆண் : கொதித்து வந்த சூரியனில் வெடித்து வந்த
பிழம்பு தான் உலகமாய் உருவானது

பெண்: குரங்கென்ற பெயரிலே உதித்துவந்த
பிராணிதான் மனிதனுய் உருவானது

பாட்டு

பெண்: காலம் மாறுது நாளுக்கு நாளு
கருத்து மாறுது—ஊருக்கு ஊரு
கோலம் மாறுது ஆளுக்கு ஆளு
கொள்கை மாறுது வீட்டுக்குவீடு (காலம் மாறுது)

ஆண் : அளவுக்கு மேலே சிலது மாறுது
ஆடை பாதியா குறைஞ்சு போவுது
அங்கே பேசினு இங்கே கேக்குது
ஆணும் பெண்ணுமே மாறிப்போவுது (காலம் மாறுது)

பெண்: வாங்க சார்

ஆண் : வணக்கம்

பெண்: வணக்கம்

ஆண் : வணக்கம்

பெண்: ஒரே ஒரு ஊரிலே
ஒரே ஒரு ராஜா

R. கனியபெருமாள்
அத்துவையபுரம்
மன்னம்பந்தல் P.O
மாயூரம் தாலுக்கா

கோரஸ்: ஒரே ஒரு ஊரிலே ஒரே ஒரு ராஜா

பெண்: இவரை உட்கார சொல்லிவிடடி
தலே முக்காட்டை வெட்டிவிடடி
ஒரு பக்கக் கிராப்பு வச்சி
பழமையை மறக்க வச்சி
இக்கால ஊசிபோடடி—அதில்
இளமையைக் காணச் சொல்லடி (காலம் மாறுது)

இயற்றியவர் :
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர் :
ஏ. எல். ராகவன்

கடவுளும் நானும் ஒருஜாதி—அந்தக்
கௌரவம் எனக்கும் சரிபாதி

கடவுளைப் பெத்த அம்ம யாருன்னு
கடவுளுக்கே இன்னும் தெரியாது—இந்த
கட்டையைப் பெத்தவ யாரோ எவரோ
எனக்கும் இன்னும் புரியாது (கடவுளும்)

அடிவிழுந்தாலும் உதை விழுந்தாலும்
கடவுள் அழுவது இல்லீங்க—என்னே
அடிச்சுப் பாருங்க உதைச்சுப் பாருங்க
நானும் அழவே மாட்டேங்க (கடவுளும்)

கடவுள் படிச்ச பள்ளிக்கூடத்தை
தேடுறேன் தேடுறேன் பல நாளா—அதைக்
காண முடியவில்லே அதனுல் நானும்
படிப்பை விட்டுட்டேன் சிலநாளா (கடவுளும்)

6

இயற்றியவர் :
அ. மருதகாசி

பாடியவர்கள் :
பி. பி. சீனிவாசன்
கே. ஜமுனுராணி

பெண்: படிக்கவேண்டும் புதியபாடம் வாத்தியாரய்யா
பழைய பாடம் தேவையில்லே வாத்தியாரய்யா

ஆண் : பார்வை சொல்லும் பாடம்கண்டு விழிக்கிறேனம்மா
—நான்
படிப்பதெங்கே புதியபாடம் வாத்தியாரம்மா (படிக்க)

பெண்: கிட்டே சென்று தொட்டால் குளிரும் புது நெருப்பு—நாம்
எட்டிச் சென்றுல் சுடும் நெருப்பு என்ன நெருப்பு?

ஆண் : ஒட்டும் இருஉள்ளந்தன்னில் பற்றிக்கொண்டது—அந்த
புத்தம் புது நெருப்பைத்தானே காதலென்பது
—கவிஞர் சொன்னது (படிக்க)

பெண்: தன்னேத்தானே சுற்றிக்கொண்டு இந்த உலகமே
செங்கதிரோனே சுற்றும்சேதி பழைய பாடமே

ஆண் : என்னே மட்டும் சுற்றிக்கொண்டு இருந்த உள்ளமே
—இன்று
உன்னேச் சுற்றிக் கேட்கும் பாடம் புதியபாடமே
—புதிய பாடமே (படிக்க)

ஆண் : படிக்கவேண்டும் புதியபாடம் வாத்தியாரம்மா
பெண்: பழைய பாடம் தேவையில்லே வாத்தியாரய்யா
இரு : ஹா... ஹா... ஹா... இம்...ம்...ம்...

இயற்றியவர்:
கவிஞர் கண்ணதாசன்

பாடியவர்:
டி. எம். சௌந்திரராஜன்

(தொகையரு)

ஊரார் அடித்துவிட்டால் தாயார் அணைத்திருப்பாள்
உணவிடுவாள் தாலாட்டி உறங்கவும் வைத்திருப்பாள்
—நானோ

தாயாரைக் கண்டதில்லை ஊராரும் வெறுக்கின்றார்
அன்ன மிட்ட ஒருதாயும் அடித்துவிட்டாள் அம்மம்மா!

பாட்டு

பேர்தெரியா அன்னை என்னைப் பெற்றெடுத்தாளே—புத்தி
பேதலித்த உலகத்திலே வாழ விட்டாளே—நான்

தாயில்லாப் பிள்ளை—பேச
வாயில்லாப் பிள்ளை

கயிறறுந்த பட்டம்போல அலையவிட்டாளே—ஒரு
கரைதெரியா தோணிபோல கலங்கவிட்டாளே
மழையறியாப் பயிர்முகம்போல் வாடவிட்டாளே—நான்
வாய்திறந்து பேசுமுன்னே மறைந்துவிட்டாளே—நான்

தாயில்லாப் பிள்ளை—பேச
வாயில்லாப் பிள்ளை

நான் சிரித்தால் சிரிப்பதற்கோர் கன்னி இருந்தாள்—தினம்
நான் அழுதால் அழுவதற்கோர் அன்னை இருந்தாள்
—இன்று

ஊருமில்லை, உறவுமில்லை யாரு மில்லையே—என்
உலகவாழ்க்கைப் பாதையிலோர் முடிவு மில்லையே—நான்

தாயில்லாப் பிள்ளை—பேச
வாயில்லாப் பிள்ளை

கால்கள் போகும் பாதையெல்லாம் போகிறேனம்மா
—நெஞ்சில்

கருணையுள்ள மனிதர்களைக் காண்கிறேனம்மா
வாழ்ந்திருந்தால் உன்னைவந்து பார்க்கிறேனம்மா—நான்
மடிந்துவிட்டால் சேதிவரும் வந்து பாரம்மா—நான்

தாயில்லாப் பிள்ளை—பேச
வாயில்லாப் பிள்ளை

இயற்றியவர் : கவிஞர் கண்ணதாசன்



பாடியவர் : பி. சுசீலா

தொட்ட கைகள் தவழ்ந்ததடி பட்டுப்போலே—கை
பட்டவுடன் நான்மலர்ந்தேன் மொட்டுப்போலே
கட்டிவைத்தக் காதல் மலர்க் கொத்துப்போலே—அவர்
கைகளுக்குள் நானிருந்தேன் முத்துப்போலே
(தொட்ட கைகள்)

கூடிவந்த மேகமென்று கூந்தலைத்தொட்டார்—வண்ணக்
குவளைபோல மலர்ந்ததென்று கண்களைத்தொட்டார்
ஓடிவந்த கனிகளென்று இதழ்களைத் தொட்டார்
—தொட்டால்
ஒடியுமென்று இடையை மட்டும் தொடாமலே விட்டார்
(தொட்ட கைகள்)

மான்மகளே என்று அழைத்தார்—என்னை
மடியில் வைத்து வார்த்தை படித்தார்
மாம்பழம்போல் கன்னமென்று சொல்லிமுடித்தார்—நான்
வாய்திறந்து பேசவந்தேன் ஒன்று கொடுத்தார்
(தொட்ட கைகள்)

R-கலியபெருமாள்
அச்சுதராயபுரம்
மன்னம்பந்தல் போஸ்டு
மாயூரம் தாலுக்கா

வணக்கம்.

R. கலியபெருமாள்
அச்சுதராயபுரம்
மன்னம்பந்தல் P.O
மாயூரம் தாலுக்கா

சுவாஜ் பிரிண்டர்ஸ், சென்னை-14. போன்: 83423


| | | |
|---|---|---|
| பாடல்கள் | ... | கவிஞர் கண்ணதாசன் |
| | | கொத்தமங்கலம் சுப்பு |
| | | மருதகாசி. |
| பின்னணிபாடியவர்கள் | ... | பி. சுசிலா, |
| | | ஆர். பாலசரஸ்வதி, |
| | | கே. ஜமுனாராணி, |
| | | எல். ஆர். ஈஸ்வரி, |
| | | சூலமங்கலம் ராஜலட்சுமி, |
| | | டி. எம். சௌந்தரராஜன், |
| | | சீர்காழி கோவிந்தராஜன், |
| | | பி. பி. சீனிவாசன், |
| | | ஏ. எல். ராகவன். |
| நடன அமைப்பு | ... | சர்மா |
| கலை | ... | தோட்டா |
| ஒளிப்பதிவு டைரக்டர் | ... | கே. எஸ். பிரசாத் |
| ஒளிப்பதிவாளர் | ... | வி. மதன்மோகன் |
| ஒலிப்பதிவு | ... | டபிள்யூ. நரசிம்மமூர்த்தி |
| எடிடிங் | ... | ஏ. சஞ்சீவி |
| புரொடக்ஷன் நிர்வாகம் | ... | சி. வி. ராதாபாபு |
| ஸ்டில்ஸ் | ... | சிட்டிபாபு |
| உதவிடைரக்ஷன் | ... | ஸ்ரீ காந்த் |
| | | ஆரணி ராமசாமி |
| ஸ்டுடியோ | ... | வாஹினி & விஜயா |

R. கலியபெருமாள்
அச்சுதராயபுரம்
மன்னம்பந்தல் P.O.
மாயூரம் தாலுக்கா

பூரண உரிமையாளர்கள் :

**பிரசாத் புரொடக்ஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,**

சென்னை-17.


PRASAD PRODUCTIONS' (MADRAS)
SASURAL
MUSIC
SHANKER JAIKISHAN
DIRECTED BY
T. PRAKASHRAO